**ஜூன் – 01**

# TNPSC துளிகள்

- சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகமானது சென்னை அருகே தையூரில் உள்ள தனது டிஸ்கவரி வளாகத்தில் புதிய சுழல் நீர் சுரங்கப்பாதை வசதியை திறந்துள்ளது.
  - மசகான் டாக் ஷிப்பில்டர்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ₹4.5 கோடி பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) நிதியுதவியுடன் கட்டப்பட்ட இந்த வசதி, கப்பல்கள், உந்து விசைகள் மற்றும் பிற கடல்சார் கட்டமைப்புகளை ஆய்வு செய்யப் பயன்படுத்தப் படும்.
- கர்நாடக முதலமைச்சர் பதவியை சித்தராமையா 2026 ஆம் ஆண்டு மே 29 அன்று ராஜினாமா செய்தார்; ஆளுநர் தாவர்சந்த் கெலாட் அவரது ராஜினாமாவை ஏற்றுக் கொண்ட நிலையில் புதிய அரசாங்கம் பதவியேற்கும் வரை, சித்தராமையா இடைக்கால முதலமைச்சராகத் தொடர்ந்து செயல்படுவார்.
  - சித்தராமையாவிற்குப் பிறகு கர்நாடகாவின் அடுத்த முதலமைச்சராக டி.கே.சிவக்குமார் பதவியேற்க உள்ளார்.
- இந்திரா மகிளா சக்தி திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களால் (SHGs) இயக்கப் படும் இந்தியாவின் முதல் சூரிய மின்சக்தி திட்டங்களை தெலுங்கானா மாநிலம் தொடங்கி வைத்துள்ளது.
  - தெலுங்கானா மாநிலம் கம்மம் மாவட்டம் வெங்கடாபுரம் கிராமத்தில் 1 மெகாவாட் (MW) சூரிய மின்சக்தி நிலையம் திறக்கப்பட்டது.
- புகையிலை மற்றும் நிக்கோடின் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்த 2026 ஆம் ஆண்டு மே 31 அன்று உலக புகையிலை எதிர்ப்பு தினம் உலகளவில் அனுசரிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "Unmask the Appeal: Countering Tobacco and Nicotine Addiction" என்பதாகும்.
- செரிமான ஆரோக்கியம் மற்றும் செரிமானக் கோளாறுகள் குறித்த விழிப்புணர்வை மேம்படுத்த ஒவ்வொரு ஆண்டும் மே 29 அன்று உலக செரிமான ஆரோக்கிய தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "Chronic Diarrhea: Don't Flush the Signs Away" என்பதாகும்.
- எவரெஸ்ட் சிகரத்தில் வெற்றிகரமாக ஏறிய முதல் பயணத்தின் 73-வது ஆண்டு நினைவு தினத்தைக் குறிக்கும் வகையில் 2026 ஆம் ஆண்டு மே 29 அன்று சர்வதேச எவரெஸ்ட் தினம் அனுசரிக்கப்பட்டது.
  - 1953 ஆம் ஆண்டு மே 29 அன்று எட்மண்ட் ஹிலாரி மற்றும் டென்சிங் நோர்கே ஆகியோர் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் மலையேறுபவர்கள் ஆவர்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## காசநோய் இறப்பிலாத் திட்டம் புதிதாக்கம்

- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் காசநோய் இறப்பிலாத் திட்டம் (TN-KET) தொடங்கப் பட்ட பிறகு, தமிழ்நாட்டின் ஆறு மாவட்டங்களில் காசநோய் (TB) இறப்பு விகிதங்கள் கணிசமாகக் குறைந்துள்ளதாக சமீபத்திய ஆய்வு ஒன்று கண்டறிந்து உள்ளது.
- காசநோய் இறப்பிலாத் திட்டம் (TN-KET) என்பது காசநோய் தொடர்பான இறப்புகளைக்

குறைப்பதில் கவனம் செலுத்தும் இந்தியாவின் முதல் மாநில அளவிலான மற்றும் மாநிலத்திற்கான பிரத்யேக திட்டமாகும்.

- தர்மபுரி, கரூர், விழுப்புரம், கன்னியாகுமரி, கடலூர் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதுடன் இங்கு காசநோய் இறப்பு விகிதங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் தொடர்ச்சியான சரிவைக் காட்டியுள்ளன.
- இத்திட்டம் தீவிர நோயால் பாதிக்கப்பட்ட காசநோயாளிகளை முன்கூட்டியே கண்டறிந்து, அவர்களுக்கு விரிவான மருத்துவ மதிப்பீடு, உள்நோயாளி பராமரிப்பு மற்றும் நீரிழிவு, இரத்த சோகை மற்றும் கல்லீரல் நோய் போன்ற இணை நோய்களுக்கான சிகிச்சையையும் வழங்குகிறது.
- இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை - தேசிய தொற்றுநோயியல் நிறுவனம் (ICMR - NIE) மற்றும் மாநில காசநோய் பிரிவு ஆகியவை இந்த ஆய்வை மேற்கொண்டன.
- இத்திட்டத்தை செயல்படுத்தியதன் மூலம், காசநோய் இறப்புகளில் தமிழ்நாடு ஒட்டு மொத்தமாக ஏறக்குறைய 2.5% குறைவைப் பதிவு செய்துள்ளதுடன் இது முன்கூட்டியே நோயைக் கண்டறிதல் மற்றும் சிறப்புச் சிகிச்சையின் செயல்திறனை எடுத்துக் காட்டுகிறது.




## சென்னை விமான நிலையப் பயணிகள் போக்குவரத்து

- பயணிகள் போக்குவரத்து அடிப்படையில் கொல்கத்தா விமான நிலையத்தை விடப் பின்தங்கிய சென்னை சர்வதேச விமான நிலையம், இந்தியாவின் 6-வது பரபரப்பான விமான நிலையமாக இடமிறங்கியுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், சென்னை 17.3 லட்சம் பயணிகளையும், கொல்கத்தா 17.6 லட்சம் பயணிகளையும் கையாண்டுள்ளன.
- கடந்த பத்து ஆண்டுகளில், சென்னை விமான நிலையத்தின் பயணிகள் போக்குவரத்து 24% மட்டுமே வளர்ச்சியடைந்துள்ள அதே வேளையில் பெங்களூரு 105% மற்றும் ஹைதராபாத் 100% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.
- புதிய ஒருங்கிணைந்த முனையக் கட்டிடம் மற்றும் விமான தள உள்கட்டமைப்பு

பணிகள் நிறைவடைந்தவுடன் பயணிகள் போக்குவரத்து அதிகரிக்கும் என விமான நிலைய அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

❖ முன்மொழியப்பட்டுள்ள பரந்தூர் புதிய விமான நிலையம், தமிழ்நாட்டின் இணைப்பை மேம்படுத்தும், முதலீடுகளை ஈர்க்கும் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Chennai airport slips to sixth spot in passenger traffic, falling behind Kolkata airport




The shift reflects changing travel patterns and stronger passenger growth at Kolkata, while Chennai remains a key aviation hub in South India.

## தாய் மற்றும் சேய் ஆரோக்கியத்தில் தமிழ்நாடு

❖ சமீபத்திய தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு-6- (NFHS-6) 2023-24-இன் தரவுகளின் படி, தமிழ்நாட்டில் தாய் மற்றும் குழந்தை சுகாதாரக் குறியீடுகளில் தொடர்ந்து முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

❖ 99.7% பிரசவங்கள் மருத்துவமனைகளில் நடைபெற்றுள்ளன, மேலும் 87.6% தாய்மார்கள் குறைந்தது நான்கு முறை மகப்பேறுக்கு முற்பட்ட பரிசோதனைகளைப் பெற்றுள்ளனர்.


❖ 12 முதல் 23 மாதங்களுக்குட்பட்ட குழந்தைகளில் 90% பேருக்கு முழுமையான தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ள நிலையில் ரோட்டா வைரஸ் தடுப்பூசி செலுத்துதல் 66.4% இலிருந்து 87.4% ஆக உயர்ந்துள்ளது.

❖ குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறியீடுகள் மேம்பட்டுள்ளதுடன் வயதுக்கேற்ற வளர்ச்சியின்மை 25.0% என்ற அளவிலிருந்து 20.7% ஆகவும், கடுமையான எடைக் குறைவு / மெலிதல் 5.5% இலிருந்து 4.9% ஆகவும் குறைந்துள்ளது.

❖ இருப்பினும், 54.8% பிறந்த குழந்தைகளுக்கு மட்டுமே பிறந்த ஒரு மணி நேரத்திற்குள் தாய்ப்பால் புகட்டப்பட்டுள்ளது, மற்றும் ஆறு மாதங்களுக்குட்பட்ட குழந்தைகளில்


55.6% குழந்தைகளுக்கு மட்டுமே பிரத்தியேகமாக தாய்ப்பால் வழங்கப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாட்டின் மொத்த கருவுறுதல் விகிதம் (TFR) NFHS-5-இல் இருந்த 1.8 என்ற அளவிலிருந்து ஒரு பெண்ணுக்கு 1.7 குழந்தைகளாகக் குறைந்துள்ளது.




## தேசியச் செய்திகள்

### தேசிய சுகாதார கணக்குகள் 2022-23




❖ மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகமானது, 2022-23 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் தேசிய சுகாதார கணக்குகள் (NHA) மதிப்பீடுகளை வெளியிட்டுள்ளது.

❖ அரசின் சுகாதாரச் செலவினம் ₹1.30 லட்சம் கோடியிலிருந்து (2013-14) ₹3.85 லட்சம் கோடியாக (2022-23) அதிகரித்துள்ளது.

❖ அதே காலகட்டத்தில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) அரசின் சுகாதாரச் செலவினப் பங்கு 1.15%-லிருந்து 1.43%-ஆக உயர்ந்துள்ளது.

- தனி நபர் அரசு சுகாதாரச் செலவினம் ₹1,042-லிருந்து ₹2,786-ஆக அதிகரித்துள்ளது.
- மொத்த சுகாதாரச் செலவினத்தில், பொதுமக்கள் தங்களின் சொந்தப் பணத்திலிருந்து மேற்கொள்ளும் மருத்துவச் செலவு 64.2%-லிருந்து 43.4%-ஆகக் குறைந்துள்ளது.
- ஆரம்ப சுகாதாரப் பராமரிப்புக்கான அரசின் செலவினம் 2013-14 மற்றும் 2022-23 ஆம் ஆண்டிற்கு இடையில் ₹0.5 லட்சம் கோடியிலிருந்து ₹1.4 லட்சம் கோடியாக அதிகரித்து உள்ளது.

## இந்தியாவின் கருவுறுதல் விகிதம்

- மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்தியத் தலைமை பதிவாளர் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையர் அலுவலகமானது அண்மையில் 'மாதிரி பதிவு முறை (SRS) புள்ளிவிவர அறிக்கை 2024'-ஐ வெளியிட்டுள்ளது.
- இந்தியாவின் மொத்த கருவுறுதல் விகிதம் (TFR) 2024 ஆம் ஆண்டில் ஒரு பெண்ணுக்கு 1.9 குழந்தைகளாகக் குறைந்துள்ளது என்பதோடு இது மாற்று நிலை அளவான 2.1-ஐ விடக் குறைவு ஆகும்.
- குழந்தை இறப்பு விகிதம் (IMR) 1,000 உயிருள்ள பிறப்புகளுக்கு 24 இறப்புகளாக மேம்பட்டுள்ள அதே நேரத்தில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் (U5MR) 1,000 உயிருள்ள பிறப்புகளுக்கு 28 இறப்புகளாகக் குறைந்துள்ளது.
- இந்தியாவில் நடைபெறும் பிரசவங்களில் சுமார் 95.4% பிரசவங்கள் மருத்துவமனைகள் மற்றும் பிற சுகாதார நிறுவனங்களில் நடந்துள்ளன என்ற நிலையில் இது தாய் மற்றும் சேய் சுகாதார சேவைகளுக்கான மேம்பட்ட அணுகலைக் காட்டுகிறது.
- உழைக்கும் வயதினரின் மக்கள் தொகை (15-59 ஆண்டுகள்) 66.4%-ஆக அதிகரித்து உள்ளது, அதே நேரத்தில் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட முதியோர்களின் மக்கள் தொகை மொத்த மக்கள் தொகையில் 9.7%-ஐ எட்டியுள்ளது.




## அவசர சிகிச்சைக்கான உரிமை

- அவசர சிகிச்சைக்கான உரிமை என்பது அரசியலமைப்பின் 21-வது சரத்தின் கீழ் உள்ள 'வாழும் உரிமை'-யின் ஒருங்கிணைந்த பகுதியாகும் என்று உச்ச நீதிமன்றம்

தீர்ப்பளித்துள்ளது.

- அனைத்து மாநிலங்களும் ஒன்றியப் பிரதேசங்களும் 112 அவசர உதவி எண்ணைச் செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்றும், மூன்று மாதங்களுக்குள் Good Samaritan குறைதீர்க்கும் முறையை ஏற்படுத்த வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- விபத்து மற்றும் அவசர சிகிச்சை பாதிப்புகளுக்கான தேசிய மருத்துவ மீட்பு நெறி முறையை வெளியிட மத்திய அரசுக்கு அனுமதி அளித்த நீதிமன்றம், அதனை மூன்று மாதங்களுக்குள் அமல்படுத்துமாறு மாநிலங்களைக் கேட்டுக்கொண்டது.
- அனைத்து பொது மற்றும் தனியார் ஆம்புலன்ஸ்களும் AIS-125 தரநிலைகளுக்கு இணங்க வேண்டும் மற்றும் 112 உதவி எண்ணுடன் இணைக்கப்பட்ட GPS அடிப்படையிலான கண்காணிப்புடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.
- மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் அவசர சிகிச்சைப் பதிவேடுகளை உருவாக்கவும், அவற்றை ஒருங்கிணைந்த தேசிய அவசர சிகிச்சைப் பதிவேட்டுடன் இணைக்கவும் உத்தரவிடப்பட்டது.
- Good Samaritan பாதுகாப்புச் சட்டங்கள், PM RAHAT பணமில்லா சிகிச்சைத் திட்டம் மற்றும் அவசரக்கால உதவிச் சேவைகள் குறித்த விழிப்புணர்வுப் பிரசாரங்களை மேற்கொள்ளவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.




## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### ஐநா பாலியல் வன்முறை அறிக்கை 2026


- மோதல் தொடர்பான பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் தரப்புகளின் 2026 ஆம் ஆண்டிற்கான ஐநாவின் (UN) தடைப் பட்டியல்/கறுப்புப் பட்டியலில் இஸ்ரேல் மற்றும் ரஷ்யா சேர்க்கப்பட்டுள்ளன.

- ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதிகளில் கைதிகள் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் மற்றும் உக்ரைன் மோதலின் போது நடந்தவை உட்பட, 2025 ஆம் ஆண்டில் மோதல் பகுதிகளில் நடந்த சரிபார்க்கப்பட்ட பாலியல் வன்முறை வழக்குகளை ஐநா அறிக்கை ஆவணப்படுத்தியுள்ளது.
- 2025 ஆம் ஆண்டில் உலகளவில் மோதல் தொடர்பான பாலியல் வன்முறை வழக்குகளாக கிட்டத்தட்ட 10,000 வழக்குகளை இந்த அறிக்கை பதிவு செய்துள்ளது. இது முந்தைய ஆண்டில் பதிவான எண்ணிக்கையை விட இரண்டு மடங்கு அதிகம் ஆகும்.
- இந்தக் தடைப்பட்டியல் / கறுப்புப் பட்டியலானது மோதல் தொடர்பான பாலியல் வன்முறைகளைக் கண்காணிக்கும் ஐநாவின் வருடாந்திர கண்காணிப்பு பொறி முறையின் ஒரு பகுதியாகும் என்பதோடு மேலும் இது பொறுப்புக்கூறல் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## மாநிலச் செய்திகள்

### கோவா மாநில உருவாக்க தினம் 2026




- 1987 ஆம் ஆண்டில் இந்தியாவின் 25-வது மாநிலமாக கோவா உருவானதன் 40-வது ஆண்டைக் குறிக்கும் வகையில் இந்த தினம் 2026 ஆம் ஆண்டு மே 30 அன்று கொண்டாடப் பட்டது.
- 1947 ஆம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, 1961 ஆம் ஆண்டு வரை கோவா போர்த்துகீசியர்களின் ஆட்சியின் கீழ் இருந்தது.
- போர்த்துகீசிய ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரவும், கோவா, டாமன் மற்றும்

டையூவை இந்திய ஒன்றியத்துடன் ஒருங்கிணைக்கவும் இந்தியாவால் 'விஜய் நடவடிக்கை' (1961 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 முதல் 19 வரை) தொடங்கப்பட்டது.


- 1962 ஆம் ஆண்டின் 12-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் கோவா, டாமன் மற்றும் டையூவை ஒரு ஒன்றியப் பிரதேசமாக இணைத்தது.
- அதிகாரப்பூர்வ மொழிச் சட்டம் 1987, கொங்கனியை கோவாவின் அதிகாரப்பூர்வ மொழியாக அங்கீகரித்ததுடன் இது தனி மாநில அந்தஸ்திற்கான கோரிக்கையை வலுப்படுத்தியது.
- 1987 ஆம் ஆண்டு மே 30 அன்று, கோவா முழு மாநில அந்தஸ்தைப் பெற்றது, அதே நேரத்தில் டாமன் மற்றும் டையூ தனி ஒன்றியப் பிரதேசமாக மாறியது.

## இரண்டு புதிய சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் – புதுச்சேரி




- முதலீடு, ஏற்றுமதி மற்றும் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்காகப் புதுச்சேரியில் இரண்டு புதிய சிறப்புப் பொருளாதார மண்டலங்களை (SEZs) மத்திய அரசு அறிவித்து உள்ளது.
- ₹725 கோடி முதலீட்டில் தட்டாஞ்சாவடியில் உழவர்கரை நகராட்சியால் தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் (IT/ITES) சிறப்புப் பொருளாதார மண்டலம் உருவாக்கப்படும்.
- இது ஒரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பால் (நகராட்சி) உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் சிறப்புப் பொருளாதார மண்டலமாக இருக்கும் என்பதுடன் மேலும் இது சுமார் 3,500 வேலைவாய்ப்புகளை உருவாக்கும் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது.
- ₹1,250 கோடி முதலீட்டில் கரசூர் கிராமத்தில் புதுச்சேரி தொழில் மேம்பாட்டு மற்றும் முதலீட்டுக் கழகத்தால் (PIPDIC) ஒரு பல்நோக்கு துறை சிறப்புப் பொருளாதார மண்டலம் உருவாக்கப்படவுள்ளது.
- இத்திட்டங்கள் தமிழ்நாடு - அந்தமான் மற்றும் புதுச்சேரி (TAP) பிராந்தியத்தில் தொழில்துறை வளர்ச்சி, உற்பத்தி மற்றும் ஏற்றுமதி சார்ந்த மேம்பாட்டை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

## முழு எழுத்தறிவு - சிக்கிம்




- ULLAS (சமூகத்தில் அனைவருக்கும் வாழ்நாள் கற்றலைப் புரிந்துகொள்ளுதல்) திட்டத்தின் கீழ் இந்தியாவின் ஐந்தாவது முழுமையான எழுத்தறிவு பெற்ற மாநிலமாக சிக்கிம் அறிவிக்கப்பட்டுள்ளது.
- தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020-இன் ULLAS (நவ பாரத் சாக்ஷரதா காரியக்ரம்) முன்னெடுப்பின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட எழுத்தறிவு வரையறைகளை சிக்கிம் எட்டியுள்ளது.
- முழு எழுத்தறிவு பெற்ற மாநிலங்களாக ஏற்கெனவே உள்ள மிசோரம், கோவா, திரிபுரா மற்றும் இமாச்சலப் பிரதேசத்துடன் தற்போது சிக்கிமும் இணைகிறது.
- வயது வந்தோரின் எழுத்தறிவு 95%-ஐத் தாண்டும்போதும், அடையாளம் காணப்பட்ட படிப்பறிவில்லாத மக்கள் எழுத்தறிவுத் திட்டங்களின் மூலம் உள்ளடக்கப் படும் போதும், ஒரு மாநிலம் பொதுவாக முழு எழுத்தறிவு பெற்றதாகக் கருதப்படுகிறது.
- ULLAS திட்டம், வயது வந்தோருக்கான அடிப்படை எழுத்தறிவு, வாழ்க்கைத் திறன்கள், தொழிற்கல்வித் திறன்கள், அடிப்படைக் கல்வி மற்றும் தொடர்கல்வி ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★